# External Affairs Minister's meeting with State Councilor and Foreign Minister of China, H.E. Mr. Wang Yi on the sidelines of G20 Foreign Ministers’ Meeting

July 07, 2022

---

## ஜி 20 வெளியுறவு அமைச்சர்களின் கூட்டத்தின் போது, மாகாண கவுன்சிலரும், சீன வெளியுறவு அமைச்சருமான மாண்புமிகு வாங் யி அவர்கள் உடனான வெளியுறவு அமைச்சரின் சந்திப்பு

ஜூலை 07, 2022

ஜி 20 வெளியுறவு அமைச்சர்களின் கூட்டத்தை ஒட்டி 2022 ஆம் ஆண்டு ஜூலை 7 அன்று இந்தோனேசியாவின் பாலியில் வெளியுறவு அமைச்சர் (EAM) மாகாண கவுன்சிலரும் சீன வெளியுறவு அமைச்சருமான மாண்புமிகு திரு. வாங் யி அவர்களை சந்தித்து பேசினார்.

2.கிழக்கு லடாக் பகுதியில் உள்ள மெய்யான கட்டுப்பாட்டு கோடு (LAC ) மற்றும் பிற பகுதிகளில் இருக்கும் தீர்க்கப்படாத அனைத்து பிரச்னைகளுக்கும் சீக்கிரமே தீர்வு காண வெளியுறவு அமைச்சர் அழைப்புவிடுத்தார். இரு தரப்பினருக்கும் மோதல் உள்ள சில பகுதிகளில் குவிக்கப்பட்ட படைகளை விலக்கிக் கொண்டதை நினைவு கூர்ந்த வெளியுறவு அமைச்சர், எல்லைப் பகுதிகளில் பதட்டத்தை தவிர்க்கவும் அமைதியை நிலைநாட்டவும் மீதமுள்ள அனைத்துப் பகுதிகளிலிருந்தும் படைகளை முழுமையாக விலக்கிக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். இருதரப்பு ஒப்பந்தங்கள் மற்றும் நெறிமுறைகளை முழுமையாகக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தையும், இரு அமைச்சர்களுக்கும் இடையிலான முந்தைய பேச்சுவார்த்தைகளின் போது எட்டப்பட்ட இணக்கமான முடிவுகளையும் அவர் மீண்டும் தெளிவுபடுத்தினார். இது தொடர்பாக பேசுகையில், இரு தரப்பிலும் உள்ள இராணுவ மற்றும் தூதரக அதிகாரிகள் வழக்கமான நல்லுறவை தொடர்ந்து பேண வேண்டும் என்று இரு அமைச்சர்களும் உறுதியளித்ததோடு, அடுத்த சுற்று மூத்த தளபதிகளின் சந்திப்பை சீக்கிரமே நடத்த ஆவலுடன் காத்திருப்பதாகத் தெரிவித்தனர். பரஸ்பர மரியாதை, பரஸ்பர பாதுகாப்பு மற்றும் பரஸ்பர நலன்கள் ஆகிய இருதரப்புக்குமான மூன்று பரஸ்பர விஷயங்களை கடைபிடிப்பதன் மூலம் இந்தியா-சீனா நல்லுறவு சிறப்பாகப் பேணப்படும் என்று வெளியுறவு அமைச்சர் மீண்டும் வலியுறுத்தினார்.

3. 2022 ஆம் ஆண்டு மார்ச் இல் டெல்லியில் மாண்புமிகு திரு. வாங் யி உடனான தனது சந்திப்பை வெளியுறவு அமைச்சர் நினைவு கூர்ந்ததுடன், மாணவர்கள் திரும்பி வருவது உட்பட அப்போது விவாதிக்கப்பட்ட சில முக்கிய பிரச்சினைகளில் இதுவரையில் அடைந்துள்ள முன்னேற்றத்தை ஆய்வு செய்தார். நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும், மாணவர்கள் விரைவில் திரும்ப வசதி செய்வதன் அவசியத்தையும் வெளியுறவு அமைச்சர் வலியுறுத்தினார்.

4. பிற பிராந்திய மற்றும் உலகளாவிய வளர்சிகள் குறித்த தங்கள் கருத்துகளையும் இரு அமைச்சர்களும் பகிர்ந்துக்கொண்டனர். வெளியுறவு அமைச்சர் மாண்புமிகு திரு. வாங் யி இந்த ஆண்டு பிரிக்ஸ் உச்சிமாநாட்டுக்கு சீனா தலைமை வகிப்பதற்க்கு இந்தியா ஆதரவு அளித்ததைப் பாராட்டினார், மேலும் வரவிருக்கும் ஜி 20 மற்றும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு கூட்டத்துக்கு இந்தியா தலைமை வகிப்பதற்கு சீனாவின் ஆதரவு வழங்கும் என உறுதியளித்தார். தொடர்ந்து இருதரப்பும் நல்லுறவைப் பேண ஒப்புக்கொண்டனர்.

**பாலி**
**ஜூலை 07, 2022**

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA’s website and may be referred to as the official press release.